**கவனிக்க.**- *2016.11.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1996 - 2016 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2016.12.02

*1996 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2169 |


**கவனிக்க.**- (i) இலங்கை சர்வதேச நேச்சர் லவிங் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நாட்டில் சுற்றாடல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) வாழ்வின் எழுச்சி (திருத்தம்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

*உதவிச் சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சை - 2016*

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உதவிச் சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2017.01.02 ஆந் திகதி வரை விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை 2017, மாச்சு மாதம் கொழும்பில் நடைபெறும்.

1. **தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

(ii) 23 வயதுக்குக் குறையாதவராகவும் 65 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iii) எட்டாம் தரத்திற்குத் தகைமை பெறுவதற்கான பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iv) சாரதிப் பயிற்சிப் பாடசாலையொன்றில் 03 வருடங்கள் ஊழியராக சேவையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும். ஊழியர் சேமலாப நிதியத்தின் இலக்கம் மற்றும் ஊழியரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இலக்கம் என்பன உள்ளடங்கிய ஆவணப்படுத்தப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும் 2016.10.20 ஆந் திகதி வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இலக்கம் அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தின் இலக்கம் என்பனவற்றுடனான ஆவணங்கள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. அவர்கள் சாரதிப் பயிற்சிப் பாடசாலையில் சேவையாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(v) உதவி ஆலோசகராவதற்கு உரிய தினத்தன்று ஆகக்குறைந்தது B, B1 மற்றும் A இற்குச் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். இருப்பினும் சாரதிப் பயிற்சிப் பாடசாலையொன்றில் ஊழியராக அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட வாகன வகுப்புக் களுக்கு ஏற்ற வகையில் 5 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமொன்றைத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(vi) குறித்த வாகன வகுப்புக்களின் வாகனங்களைச் செலுத்துவதற்கும் மற்றும் வாகனங்களைச் செலுத்துவதற்குப் பயிற்சியளிப்பதற்கும் ஏற்ற தேகாரோக்கியத்துடன் இருக்கின்றமையை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் அல்லது ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அரச அல்லது பகுதியளவிலான அரச நிறுவனமொன்றின் மருத்துவ அதிகாரியினால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(vii) அரச அல்லது பகுதியளவிலான அரச நிறுவன மொன்றில் அல்லது அவ்வாறான வேறு நிறுவனமொன்றில் பயிற்றுவிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவராக இருத்தல் வேண்டுமே யொழிய அவர் அத்தகைய நிறுவனமொன்றின் ஊழியராக இருத்தல் ஆகாது.

2. **பரீட்சை முறை** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே விடையளித்தல் வேண்டும். முதலில் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றஞ்செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. **பரீட்சைக்குரிய பாடங்கள்**.- இப்பரீட்சை மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் குறித்த இரண்டு பகுதிகளைக் கொண்டது :

(i) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத் துவம் I - காலம் : 2 மணித்தியாலம்

(ii) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத் துவம் II - காலம் : 2 மணித்தியாலம்

4. **பாடப்பரப்பு**.- இவ்விரண்டு வினாத்தாள்களிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதி விதிகள், பாதை வழிகாட்டிக் கோவை, கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தல் முறை, பாதுகாப்பாக வாகனத்தைச் செலுத்துதல், நெறிமுறைகள், முதலுதவி, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு குறித்த வினாக்கள் உள்ளடங்கும்.

5. (i) **தெரிவுசெய்யும் முறை**.- ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40% என்ற ரீதியில் எழுத்துப் பரீட்சை முழுமைக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளை நேர்முகத் தேர்விற்கு அழைத்து சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் பரிசீலிக்கப்படும். நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வாரங்களுக்குக் குறையாத சாரதி ஆலோசகர் பாடநெறியில் பங்குபற்றல் வேண்டும் என்பதோடு, அதனை வெற்றிகரமாகப் பயின்றதன் பின்னர் சாரதிகளைப் பயிற்றுவிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அப்பரீட்சையில் 40% ஐப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளுக்கு உதவி ஆலோசகர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

(ii) **பரீட்சைப் பெறுபேறுகள்**.- எழுத்துப் பரீட்சையில் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் உள்ளடங்கிய ஆவணம் மோட்டார் வாகனப்

போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தபாலில் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் அறிவிக்கப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும் என்பதோடு, தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவிலான தாளில் தயாரித்து விண்ணப்பதாரியே பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும். மேலும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு எண் 1 தொடக்கம் 7 வரையானவை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழியிலேயே விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத்தபாலில் 2017.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ''கொழும்பு 5, எல்விட்டிகல மாவத்தை, இலக்கம் 341, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்'' எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவிச் சாரதி ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்துப் பரீட்சை'' எனத் தெளிவாக எழுதுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) *பரீட்சைக் கட்டணம்.*- பரீட்சைக் கட்டணம் 2,000 ரூபா ஆகும். இத்தொகையை நாட்டில் உள்ள எந்தவொரு மாவட்டச் செயலகத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் வருமானத் தலைப்பு 6000-0000-00-0013-0027-000 இற்கு வைப்பிலிட்டு பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும்.

(உ) அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரம்மிக்க உத்தியோகத்தரினால், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் அல்லது ரூ. 2,40,360 இற்கு மேற்பட்ட அடிப்படை வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம். தபாலிடும்போது விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் கருத்திக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது குறித்து பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஆகக்குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வதியும் ஒருவர் எனில், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் காணப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரித்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்

படுத்துவதற்காகத் தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலிலிடுகையில் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயனுடையதாகும்.

(அ) பரீட்சையின் பெயர் :----.

(ஆ) பரீட்சார்த்தியின் பெயர் :----.

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ----.

(ஈ) முகவரி :----.

(உ) தொலைநகல் இலக்கம் :----.

(ஊ) விண்ணப்பப்படிவத்தைத் தபாலிலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம் : ----.

(எ) பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இலக்கம் :----.

(ஏ) பரீட்சார்த்தி தனது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சை அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

7. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்தி தான் தோற்றும் எல்லாப் பாடங்களுக்கும் பரீட்சகர் திருப்தியடையும் வகையில் பரீட்சை நிலையத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. இப்பரீட்சை அறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து
ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2016, நவெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**
**Department of Motor Traffic**

உதவிச் சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சை - 2016

Application for a Written Examination for Assistant Driving Instructor Registration - 2016

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில் தமிழில்) :----.

2. (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(இ) சாரதி பயிற்சிப் பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5. (அ) வயது : ☐☐

பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐

6. கல்வித் தகைமைகள் :----.

7. அனுபவம் (உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களை இணைக்கவும்.) :----.

8. (i) பரீட்சைக் கட்டணம் 2,000 ரூபா ஆவதோடு, அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கே கழராதவாறு ஒட்டவும்.

(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளல் பயனுடையதாக இருக்கும்.)

(ii) நீங்கள் அரச, பகுதியளவிலான அரச அல்லது அத்தகைய வேறு ஒரு நிறுவனத்தில் சாரதிகளைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தீர்களேயொழிய அவ்வாறான தொரு நிறுவனத்தின் ஊழியரல்ல என்பதைச் சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப் படுத்தல் வேண்டும். (6 மாத காலத்தில் ஓய்வுபெறவுள்ளோரும் விண்ணப்பிக்கலாம். ஓய்வுபெற்றதன் பின்னரே அவர்களுக்கு ஆலோசகர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.)

மேற்குறித்த தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் அனைத்து வழிகளிலும் சரியானவை என்பதைத் தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

திரு./ திருமதி/ செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் ............................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும், அப்பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

12-23/ 1

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

*சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சை - 2016*

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2017.01.02 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இப்பரீட்சை 2017, மாச்சு மாதம் கொழும்பில் நடைபெறும்.

1. **தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

(ii) 23 வயதிற்குக் குறையாதவராகவும் 65 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையொன்றில் கணிதம் மற்றும் மொழி உள்ளடங்கலாக 6 பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iv) (அ) ஏதேனுமொரு வகுப்பிற்குரிய வாகனங்கள் தொடர்பான ஆலோசகராக விண்ணப்பிப்பதாயின், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள திகதியன்று குறித்த வகுப்பிற்குரிய வாகனங்களுக்கு 5 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமொன்று அவரிடம் இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| "ஏ" வகுப்பு சாரதி ஆலோசகர் | "டிஈ" அல்லது "சீஈ" மற்றும் "ஏ" வகுப்புகளுக்கு குறித்த திகதியில் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் |
| "பீ" வகுப்பு சாரதி ஆலோசகர் | "டி" அல்லது "சீ" மற்றும் "ஏ" வகுப்புகளுக்கு குறித்த திகதியில் செல்லுபடியான வாகன அனுமதிப் பத்திரம் |
| "சீ" வகுப்பு சாரதி ஆலோசகர் | "பி", "பி1" மற்றும் "ஏ" வகுப்புகளுக்கு குறித்த திகதியில் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் |

(ஆ) உதவிச் சாரதி ஆலோசகராக விண்ணப்பிக்கும் திகதியன்று 5 வருட அனுபவத்துடன் மேற்குறித்த வகுப்புகளுக்கு குறித்த திகதியில் பெற்றுக்கொண்ட செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரமொன்று இருத்தல் வேண்டும்.

(v) குறித்த வாகன வகுப்புக்களின் வாகனங்களைச் செலுத்துவதற்கும் மற்றும் வாகனங்களைச் செலுத்துவதற்குப் பயிற்சியளிப்பதற்கும் ஏற்ற தேகாரோக்கியத்துடன் இருக்கின்றமையை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் அல்லது ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் கையளிக்கப்படும் வேறு ஏதேனும் அரச அல்லது பகுதியளவிலான அரச நிறுவனமொன்றின் மருத்துவ அதிகாரியினால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும்.

(vi) அரச அல்லது பகுதியளவிலான அரச நிறுவனமொன்றில் அல்லது அவ்வாறான வேறு நிறுவனமொன்றில் பயிற்றுவிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவராக இருத்தல் வேண்டுமேயொழிய அவர் அத்தகைய நிறுவனமொன்றின் ஊழியராக இருத்தல் ஆகாது.

2. **பரீட்சை முறை** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே விடையளித்தல் வேண்டும். முதலில் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றஞ்செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. **பரீட்சைக்குரிய பாடங்கள்**.- இப்பரீட்சை மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் குறித்த இரண்டு பகுதிகளைக் கொண்டது :

(i) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் I - காலம் : 2 மணித்தியாலம்

(ii) மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம் II - காலம் : 2 மணித்தியாலம்

4. **பாடப்பரப்பு**.- இவ்வினாத்தாளின் இரண்டு பகுதிகளிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதி விதிகள், பாதை வழிகாட்டிக் கோவை, கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தல் முறை, பாதுகாப்பாக வாகனத்தைச் செலுத்துதல், நெறிமுறைகள், முதலுதவி, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு குறித்த வினாக்கள் உள்ளடங்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

5. (i) **தெரிவுசெய்யும் முறை**.- ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40% என்ற ரீதியில் எழுத்துப் பரீட்சை முழுமைக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளை நேர்முகத் தேர்விற்கு அழைத்து சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் பரிசீலிக்கப்படும். நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வாரங்களுக்குக் குறையாத சாரதி ஆலோசகர் பாடநெறியில் பங்குபற்றல் வேண்டும் என்பதோடு, அதனை வெற்றிகரமாகப் பயின்றதன் பின்னர் சாரதிகளைப் பயிற்றுவிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அப்பரீட்சையில் 40% ஐப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளுக்கு ஆலோசகர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

ஆலோசகர் பாடநெறிக்குரிய கட்டணத்தை விண்ணப்பதாரிகள் செலுத்துதல் வேண்டும்.

(ii) பரீட்சைப் பெறுபேறுகள்.- எழுத்துப் பரீட்சையில் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் உள்ளடங்கிய ஆவணம் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தபாலில் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் அறிவிக்கப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும் என்பதோடு, தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவிலான தாளில் தயாரித்து விண்ணப்பதாரியே பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும். மேலும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு எண் 1 தொடக்கம் 7 வரையானவை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழியிலேயே விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத்தபாலில் 2017.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "கொழும்பு 5, எல்விட்டிகல மாவத்தை, இலக்கம் 341, மோட்டார் வாகனப் போக்கு வரத்துத்

திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்'' எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் மேற்பக்க இடது மூலையில் "சாரதி ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்துப் பரீட்சை'' எனத் தெளிவாக எழுதுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 2,000 ரூபா ஆகும். இத்தொகையை நாட்டில் உள்ள எந்தவொரு மாவட்ட செயலகத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் வருமானத் தலைப்பு 6000-0000-00-0013-0027-000 இற்கு வைப்பிலிட்டு பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும்.

(உ) அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரம்மிக்க உத்தியோகத்தரினால், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் அல்லது ரூ. 2,40,360 இற்கு மேற்பட்ட அடிப்படை வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம். தபாலிலிடும்போது விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெற்றமை குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது குறித்து பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஆகக்குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வதியும் ஒருவர் எனில், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரற்கடிதம் ஒன்றை அறிவித்தலில் காணப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரித்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகத் தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலிடு கையில் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயனுடையதாகும்.

(அ) பரீட்சையின் பெயர் :----.

(ஆ) பரீட்சார்த்தியின் பெயர் :----.

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

(ஈ) முகவரி :----.

(உ) தொலைநகல் இலக்கம் :----.

(ஊ) விண்ணப்பப்படிவத்தைத் தபாலிலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம் : ----.

(எ) பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இலக்கம் :----.

(ஏ) பரீட்சார்த்தி தனது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சை அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

7. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் எல்லாப் பாடங்கள் குறித்தும் பரீட்சகர் திருப்தியடையும் வகையில் பரீட்சை நிலையத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. இப்பரீட்சை அறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து
ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து
ஆணையாளர் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2016, நவெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**
**Department of Motor Traffic**

சாரதி ஆலோசகர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சை - 2016
Application for a Written Examination for Driving Instructor Registration - 2016

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA

(ஆ) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(இ) சாரதி பயிற்சிப் பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5. விண்ணப்பதாரியின் வயது மற்றும் பிறந்த திகதி :

(அ) வயது : ☐☐

பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐
ஆண்டு மாதம் திகதி

6. கல்வித் தகைமைகள் :----.

7. அனுபவம் (உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களை இணைக்கவும்.) :----.

8. (i) பரீட்சைக் கட்டணம் ரூபா 2,000 ஆவதோடு, அத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

☐

(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளல் பயனுடையதாக இருக்கும்.)

(ii) நீங்கள் அரச, பகுதியளவிலான அரச அல்லது அத்தகைய வேறு ஒரு நிறுவனத்தில் சாரதிகளைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தீர்களேயொழிய அவ்வாறானதொரு நிறுவனத்தின் ஊழியரல்ல என்பதைச் சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (6 மாத காலத்தில் ஓய்வுபெறவுள்ளோரும் விண்ணப்பிக்கலாம். ஓய்வுபெற்றதன் பின்னரே அவர்களுக்கு ஆலோசகர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.)

மேற்குறித்த தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் அனைத்து வழிகளிலும் சரியானவை என்பதை தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால்

விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ...................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் ............................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும், அப்பற்றுச்சீட்டை இணைத் துள்ளார் என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்)
முகவரி :----.
திகதி :----.

12-23/ 2

---

## விவசாயத் திணைக்களம்

### விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் ஒரு வருட தேசிய டிப்ளோமா பாடநெறி - 2017/ 2018 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை

2017/ 2018 ஆம் ஆண்டின் விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் ஒரு வருட தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (NVQ Level - 5) மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைகள் பிரிவின் மூலம் 2017 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதான நகரங்கள் சிலவற்றில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. தேசிய தொழில்சார் தகைமைகள் 5 ஆம் மட்டத்தில் விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் ஒரு வருட தேசிய டிப்ளோமா (NVQ Level - 5) விவசாயத் திணைக்களத்தின் தேசிய தொழில்சார் தகைமைகள் 5 ஆம் மட்ட (NVQ Level - 5) விவசாயக் கல்லூரிகளில் நடாத்தப்படும் :

2.1 விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் ஒரு வருட பயிற்சிநெறி ஆண், பெண் இருபாலாருக்கும் நடாத்தப்படுவதோடு, நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் அதிகூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறுவனங்களில் காணப்படும் வசதிகளுக்கமைய போதுமான எண்ணிக்கையில் தெரிவுசெய்யப்படுவர்.

2.2 பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தகைமையைப் பரிசோதிப்பதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு, அதற்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 இப்பயிற்சிநெறி ஆங்கில மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

2.4 இப்பயிற்சிநெறி தங்குமிட வசதியுடன் கூடிய முழுநேரப் பயிற்சிநெறியாகும். அனைத்துப் பயிலுநர்களும் பயிற்சிக் காலத்தின்போது கட்டாயமாக விடுதியில் தங்கி பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.5 பயிற்சி நிறுவனத்தின் ஒரு வருட பயிற்சியின் பின்னர், தேசிய பயிலுநர் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையின் மேற்பார்வையின்கீழ், பெயர் குறிப்பிடப்படும் நிறுவனத்தில் ஆறு (6) மாத காலத்திற்குத் தொழில் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.6 மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மூலம் பயிலுநர்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு NVQ Level - 5 மட்டத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

2.7 இச்சான்றிதழ் விவசாயத் திணைக்களம் உட்பட ஏனைய விவசாய தொடர்புடைய அரச நிறுவனங்களில் தொழில்நுட்ப உதவியாளர் மட்டத்திலான தொழில் வாய்ப்புகளுக்கான தகைமையாகக் கருதப்படும்.

*3.* **பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களுக்குக் கட்டாயமாகத் திறமைச் சித்தியை அல்லது விசேட சித்தியைப் பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் ஆகிய ஆறு (6) பாடங்களில் ஏதாவதொன்றிற்குத் திறமைச் சித்தி உட்பட (இதற்கமைய மொத்தமாக (4) திறமைச் சித்திகள் இருக்க வேண்டும்.) மொத்தமாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இங்கு ஒரு தடவையில் ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம், உயிரியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றிலாவது சித்தியடைந்திருக்க வேண்டும். (உயர் தரத்தில் கணிதப் பிரிவைப் பயின்ற மாணவர்கள் இரசாயனவியலில் அல்லது பௌதீகவியலில் சித்தியடைந்திருப்பது தெரிவுசெய்யப்படுவதற்கான ஒரு தகைமையாகக் கருதப்பட மாட்டாது.)

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களைப் பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் பொறியியல், தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களைப் பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறைவாகவோ அல்லது 25 வயதிற்கு மேற்பட்டோ இருத்தல் கூடாது.

3.3 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விவசாயத் துறையுடன் தொடர்புடைய பின்வரும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level - 4) பாடநெறியைப் பயின்று மூன்றாம் நிலை தொழிற்கல்வி, ஆணைக்குழுவால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் மட்டம் 4 இல் (NVQ Level - 4) சான்றிதழைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
- தோட்ட அலங்கார கலைஞர்

அல்லது விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட விவசாயத் துறையுடன் தொடர்புடைய இம்மட்டத்திலான வேறு பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

3.3.1 மேற்கூறிய தேசிய தொழில்சார் தகைமை 4 மட்டத்தில் (NVQ Level - 4) பாடநெறி ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள் :

சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களுக்குக் கட்டாயமாக திறமைச் சித்தியை அல்லது விசேட சித்தியைப் பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் ஆகிய ஆறு (6) பாடங்களில் ஏதாவதொன்றிற்குத் திறமைச் சித்தி உட்பட (இதற்கமைய மொத்தம் நான்கு (4) பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.) மொத்தமாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இங்கு ஒரு தடவை ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் NVQ Level - 4 மட்டத்தில் விவசாயத் துறையுடன் தொடர்புடைய பாடநெறியைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

3.3.2 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறைவாகவோ 25 வயதிற்கு மேற்பட்டோ இருத்தல் கூடாது.

3.3.3 இவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினால் தனியான போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். அதில் கூடியளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இப்பயிற்சியில் சேர்த்துக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கையில் 10 வீதமானவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் நடைபெறும் தினத்தை விவசாயத் திணைக்களம் பின்னர் அறிவிக்கும்.

4. **பாடநெறிக்கு விண்ணப்பித்தல்** :

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பதாரியின் கையெழுத்திலோ அல்லது தட்டச்சிலோ அல்லது கணினியிலோ 8" x 12" அளவுள்ள (A4 அளவுள்ள) கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தனது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுத வேண்டும். அதில் இலக்கம் 1 முதல் 8 வரை முதல் பக்கத்திலும், 8 முதல் 11 வரை இரண்டாவது பக்கத்திலும், 12 முதல் 14 வரை மூன்றாம் பக்கத்திலும், மிகுதி 4 ஆம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணப்படுத்தப்படாத அல்லது மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இல்லாது நிராகரிக்கப்படும். தாம் நிரப்பும் விண்ணப்பப்படிவத்தினை இவ்வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் 700 ரூபா ஆகும். விண்ணப்பதாரியினால் மக்கள் வங்கியில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 057100179027204 கொண்ட வங்கிக் கணக்கிற்கு 700 ரூபா செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

4.3 அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2017.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் பிந்திக் கிடைக்கும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2017/2018 ஒரு வருட தேசிய விவசாய டிப்ளோமா பாடநெறிக்கு அனுமதி பெறல்" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள்**.- 2017/2018 விவசாய உற்பத்தி தொழில்நுட்ப பாடநெறிக்கு மாணவர்களை அனுமதிக்கும் போட்டிப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் மூலம் சிங்களம், தமிழ் மொழிகளில் 2017, சனவரி மாதம் பின்வரும் நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| நகர இலக்கம் | நகரம் |
|---|---|
| 1 | கம்பஹா |
| 2 | அம்பாறை |
| 3 | தம்புள்ளை |
| 4 | காலி |
| 5 | அம்பாந்தோட்டை |
| 6 | குருநாகல் |
| 7 | கண்டி |
| 8 | வவுனியா |
| 9 | அநுராதபுரம் |

குறிப்பிட்டதொரு பரீட்சை நிலையத்திற்கு போதியளவான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, விண்ணப்பதாரியின் இரண்டாவது தெரிவிற்கமையவோ அல்லது விண்ணப்பித்துள்ள நிலையத்திற்கு அருகில் உள்ள வேறு ஒரு பரீட்சை நிலையமோ அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள நகரம்/நகரங்களையோ, போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழியையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6. **பரீட்சை முறைமை :**

6.1 போட்டிப் பரீட்சைக்கான பாடங்களும் நேர அட்டவணையும் கீழே தரப்பட்டுள்ளன :

| பாடம் | கால அளவு | நேர அட்டவணை |
|---|---|---|
| 1. முதலாம் வினாத்தாள் (01) - விவசாயம் (100 புள்ளிகள்) (க. பொ. த. (சா./ த.) விவசாய பாடவிதானத்திற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது.) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 1 மணி | 10.00 மணி - 11.00 மணி |
| 2. இரண்டாம் வினாத்தாள் (02) - விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) (ஒழுங்கமைப்பு, எதிர்வுகூறல், தொடர்பு காணல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்கள் மதிப்பிடப்படும்.) பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது.) எல்லா வினாக்களுக்கு விடையளிக்கவும். | 1 மணி | 11.30 - 12.30 மணி |

6.2 இங்கு 3.1, 3.2, 3.3.1, 3.3.2 ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் விவசாயத் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரங்களை அஞ்சல் செய்தவுடன் அது தொடர்பான விளம்பரமொன்று விவசாயத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இவ்விளம்பரத்தினைப் பிரசுரித்து 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவர்கள் அனுமதிப்பத்திரத்தை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு, கீழே (அ), (ஆ), (இ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளுடன் விவசாயத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து தமக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் :

(அ) விண்ணபப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி ;
(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டினது நிழற்படப் பிரதிகள் ;
(இ) விண்ணப்பத்தினை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதிகள்.

6.3 விண்ணப்பதாரிகளினால் பெறப்பட்ட புள்ளிகள் திணைக்கள இணைய வலைத்தளத்தில் வெளியிடப்படும். மேற்குறிப்பிட்ட இரண்டு பாடங்களினதும் கூட்டுத்தொகையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரி ஒருவரை எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருப்பதன் காரணமாக அவர் தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருத முடியாது. பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படும்.

6.4 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரண்டிற்கும் தோற்றுவதற்கு அரசாங்கத்தினால் எந்தவிதமான படிகளும் செலவுகளும் வழங்கப்பட மாட்டாது.

கலாநிதி ஆர். ஆர். ஏ. றொஹான் விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**NVQ 5 மட்டத்திலான விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான ஒரு வருட தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2017**

**Competitive Examination for Admission to National Diploma in Agricultural Production Technology One Year Course NVQ Level 05 - 2017**

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. | பரீட்சைக்குத் தோற்றும் நகரம் : | அந்நகரின் இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு ..................... | ..................... |
| 2 ஆம் தெரிவு ..................... | ..................... |
| 3 ஆம் தெரிவு ..................... | ..................... |

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களமொழி - 2
தமிழ் மொழி - 3

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைவாக)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3. ஆண்/ பெண்

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. க. பொ. த. (உ. த.) உயிரியற் பிரிவில் தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை

(3.1 ஆம் பந்திக்கு ஏற்ப)

5. (அ) (i) முதல் எழுத்தைக் கடைசியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில், தெளிவான எழுத்துக் களில்) :----.

(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிக்கப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(உ-ம் : ANANDA, K. C. B)

(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

6. (i) முழுமையான முகவரி :----.
(ii) அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முழுமையான முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :
(i) நிலையானது :----.
(ii) செல்லிடப்பேசி :----.

7. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

8. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :----.
(ஆ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (ஆங்கிலத்தில்) :----.

9. பிறந்த திகதி :

வருடம் :----. மாதம் :----. திகதி :----.

10. 2017.01.02 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

11. கல்வித் தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கட்டாயமாக வாசித்து இப்பாகத்தினை நிரப்பவும்) NVQ Level 4 பாடநெறியைப் பயின்று தகைமை பெற்றவர்களுக்கு ஏற்புடையதல்ல.)

(அ) இந்த அறிவித்தலில் 3.1 ஆம் பந்திக்கமைய க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. | | |
| | | 2. | | |
| | | 3. | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கமைய கட்டாயமாகத் திறமைச் சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்களின் விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் மொழி | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. விவசாயம் | | |
| | | 5. சமூகக்கல்வி | | |
| | | 6. வரலாறு | | |
| | | 7. வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் | | |
| | | 8. விவசாய உணவுத் தொழில்நுட்பம் | | |
| | | 9. பூங்கனியியல் | | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் உயிரியற் பிரிவில் தோற்றினீரா ? ஆம்/ இல்லை.
(தேவையற்ற சொல்லைக் கீறிவிடவும்.)

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல்<br>2. விவசாயம்<br>3. பௌதீகவியல்<br>4. இரசாயனவியல்<br>5. உயிரியல் தொழில்நுட்பம்<br>6. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்<br>7. பொறியியல் தொழில் நுட்பவியல் | | |

(ஈ) மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்த கல்விச் சான்றிதழின் நிழற்பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை.)
கல்விச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :----.

12. NVQ மட்டம் 4 ஐப் பின்பற்றி தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது-

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை முடிவுகள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. | | |
| | | 2. | | |
| | | 3. | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ii) பயின்ற NVQ மட்டம் 4 தொடர்பான விபரங்கள் :

(அ) பாடநெறியின் பெயர் :----.
(ஆ) பயிற்சியைப் பின்பற்றிய நிறுவனத்தின் பெயர் :----.
(இ) NVQ தகைமை பெற்ற வருடம் :----.
(சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியை இத்துடன் இணைக்கவும்.)

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கான உயிரியல் பாடத்துறை அல்லது தொழில்நுட்பவியல் பாடத்துறையில் பயின்றிருப்பின் அப்பரீட்சை முடிவுகள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல்<br>2. விவசாயம்<br>3. பௌதீகவியல்<br>4. இரசாயனவியல்<br>5. உயிரியல் தொழில்நுட்பம்<br>6. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்<br>7. பொறியியல் தொழில் நுட்பவியல் | | |

13. உயிரியற் பிரிவில் கற்று தொழில்நுட்பவியல் தகைமை பெற்ற NVQ 4 ஆம் மட்டத்திலும் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கீழ்வரும் பகுதி ஏற்புடையதாகும்.

நீர் NVQ Level 4 தகைமைகளுடன் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சைத் தகைமைகளுடன் தோற்றுகின்றீரா என்பதைக் குறிப்பிடுக :----. (உரிய ஒரு கூட்டில் மாத்திரம் புள்ளியிடுக.)

NVQ Level 4 பாடநெறியின் தகைமைகளுடன் ☐

உயர் தர தகைமைகளுடன் ☐

14. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

15. பரீட்சைக் கட்டணம் தொடர்பான விபரங்கள் :

15.1 விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057100179027204 எனும் கணக்கு இலக்கத்திற்கு மக்கள் வங்கியில் வரவிலிட்டுப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :----.

15.2 பணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் பசையால் ஒட்டி விடவும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைக் கட்டாயமாக தம்வசம் வைத்துக்கொள்ளவும். |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதோடு தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய 6 பாடங்களில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர் தரத்தில் உயிரியற் பிரிவில்/ தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ளேன் என உறுதியளிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது விவசாயக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமைகளை இழப்பேன் என்பதையும் அறிவேன். இப்பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரினால் அல்லது பாடசாலை அதிபர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவானால் அல்லது சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்குத் திரட்டிய சம்பளமாக 2,30,060 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பமிட்ட திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளைப் பெற்றுள்ளார் என்பதை வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் பரீட்சித்து, பொறுப்புடன் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பமும் தகைமைகளை உறுதிப்படுத்துபவரின்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

12-61

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2016***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2016 |
| | | வெள்ளி | 09.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.11.2016 |
| | | வெள்ளி | 16.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2016 |
| | | வெள்ளி | 23.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2016 |
| | | வெள்ளி | 30.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2016 |

***அட்டவணை - 2017***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 06.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2016 |
| | | வெள்ளி | 13.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2016 |
| | | வெள்ளி | 20.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2017 |
| | | வெள்ளி | 27.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2017 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2017 |
| | | வியாழன் | 09.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2017 |
| | | வெள்ளி | 17.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2017 |
| | | வியாழன் | 23.02.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.02.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.